## சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவகம் ---- 2012

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவகத்தின், 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டுத் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

(அ) ரூபா 39,226,933 கூட்டுமொத்தக் தொகையான நிலையான சொத்துக்கள் பௌதீக மெய்மையாய்வின் அடிப்படையிலான பெறுமதியில் கொண்டுவரப்படுவதற்குப் பதிலாக பதிவேட்டுப் பெறுமதியின் அடிப்படையில் கணக்குகளிற்கு எடுக்கப்பட்டிருந்தது.

(ஆ) சுவாமி விபுலானந்தா இசை மற்றும் நடனக் கல்லூரியின் காணி மற்றும் கட்டிடத்தின் பெறுமதி மீளமதிப்பீடு செய்யப்பட்டு நிறுவகத்தின் நிதிக் கூற்றுக்களிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

### 2. நிதிசார் மீளாய்வு

### 2.1.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி மீளாய்வாண்டில் நிறுவகத்தின் நடவடிக்கைகள் விளைவித்திருந்த மீண்டுவரும் செலவுகளிற்கான ரூபா 57,500,000 ஆன அரசாங்க மானியத்தைக் கணக்கிற்கு எடுத்த பின்னரான ரூபா 3,573,872 ஆன மிகையை முன்னைய ஆண்டிற்கான ரூபா 42,314,778 ஆன அரசாங்க மானியத்தைக் கணக்கிற்கு எடுத்த பின்னரான ரூபா 1,934,894 ஆன நேரொத்த பற்றாக்குறையுடன் ஒப்பிடலாம்

எனவே, மீண்டுவரும் மாணியத்திலேற்றபட்ட அதிகரிப்புக் காரணமாக ரூபா 5,508,766 ஆல் நிதிசார் விளைவுகளில் மேலும் ஒரு முன்னேற்றத்தைக் அது காட்டுகின்றது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

**பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.**

**(அ) பரீட்சைகளின் பெறுபேறுகள்**

தரப்பட்ட தகவல்களின் படி, நடைபெற்ற பரீட்சைகளில் பட்டதாரி மாணவர்களின் செயலாற்றல் கீழே தரப்படுகின்றன.

| பீடம் | பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களின் எண்ணிக்கை | சித்தியடைந்த மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| இசை | 45 | 44 |
| நடனம் | 56 | 54 |
| நாடகம் மற்றும் அரங்கம் | 90 | 82 |
| கண்காட்சி மற்றும் தொழில் நுட்பக் கலைகள் | 06 | 06 |
| மொத்தம் | 197 | 186 |

**(ஆ) ஒரு மாணவருக்கான கிரயம்**

நிறுவகத்தின் நான்கு பாடநெறிகளுக்காகப் பதிவு செய்யப்பட்ட மாணவர்களின் மொத்த எண்ணிக்கை 796 ஆகும். மீளாய்வாண்டில் செய்யப்பட்ட மொத்த மீண்டு வரும் செலவினம் ரூபா 54,285,237 தொகையாகும். மீளாய்வாண்டிற்கான ஒரு மாணவரிற்கான சராசரி மீண்டுவரும் கிரயம் ரூபா 68,198 ஆகும். முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது ஒரு மாணவரிற்கான கிரயம் ரூபா 8,334 ஆல் அதிகரித்திருந்தது.

**(இ) மகா பொல மற்றும் உதவிப்பணங்கள்**

மீளாய்வாண்டில் 583 மாணவர்களிற்கு உதவிப்பணமாக ரூபா 7,825,200 தொகை செலுத்தப்பட்டதுடன் 55 மாணவர்களிற்கு ரூபா 472,500 தொகை மாஹாபொலவாகவும் செலுத்தப்பட்டது.

## 3.2 முகாமைத்துவ திறமையின்மைகள்

**பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன**

(அ) 2011 ஆம் ஆண்டில் பல்வேறு வழங்குனர்களின் பெயரில் பிறப்பிக்கப்பட்ட ரூபா 3,622,315 பெறுமதியான 14 காசோலைகள் நிறுவகத்தின் ஒரு உத்தியோகத்தரால் மட்டக்களப்பில் தனியார் வங்கியில் பேணப்பட்ட அவரின் வங்கிக் கணக்கினூடாக மோசடியாகக் காசாக்கப்பட்டிருந்தது.

(ஆ) நிறுவகம் முன்னைய ஆண்டில் ரூபா 4,183,728 கிரயத்தில் தரை விரிப்புக்கள், முக்காலிநிலைகள், சிற்ப வேலை உருளைகள் மற்றும் அடுக்குக் கட்டில்கள் என்பவற்றைக் கொள்வனவு செய்திருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) ஒரு சதுர அடி தரை விரிப்பு ரூபா 480 என்ற உயர்ந்த விலை வீதத்தில் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், மட்டக்களப்பு மாவட்ட செயலகம், ஒரு சதுர சமதரை வரிப்பு ரூபா 60 வீதம் அதே நேரத்தில் கொள்வனவு செய்திருந்தது.

(ii) சிரேஷ்ட உதவி நிதிளரால் 7 தெரிவு செய்யப்பட்ட தரைவிரிப்பு வழங்குனர்களிற்கு கேள்வி ஆவணங்கள் அனுப்பப்பட்டிருந்த போதிலும், காத்தான்குடியிலுள்ள ஒரு வழங்குனர் ஒரு பொய்யான பெயருடனும், இரண்டாவது வழங்குனர் வாகன சேவை நிலையம் மற்றும் வெல்டிங் கராஜாக இருந்தது. மட்டக்களப்பிலுள்ள இன்னொரு வழங்குனர் ஒரு வெல்டிங் வேலைத்தளமாகும்.

(iii) எழுபது எண்ணிக்கையான முக்காலி நிலைகள் ஒவ்வொன்றும் ரூபா 14,000 ஆக கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. எனினும், வழங்குனரிடமிருந்து பெறப்பட்ட கூற்றின்படி சந்தையில் நிலவிய

உண்மையான விலை ஒவ்வொன்றிக்கும் ரூபா 7,000 ஆகும். இது தொடர்பில் ரூபா 490,000 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(iv) பிரதேச செயலக சுற்றாடல் உத்தியோகத்தர் மற்றும் ஆரையம்பதி பிரதேச சபையின் அறிக்கைகளின் படி, முக்காலி நிலைகள் கொள்வனவு செய்யப்பட்ட வேலைத்தளம், ஒரு வெல்டிங் கராஜ்ஜாகும்.

(v) சிரேஷ்ட உதவி நிதியாளரால், தெரிவு செய்யப்பட்ட ஏழு வழங்குனர்களிற்கு கேள்வி ஆவணங்கள் அனுப்பப்பட்டிருந்த போதிலும், ஐந்து கேள்விதாரர்கள் வெல்டிங் வேலைத்தளங்களாக இருந்ததுடன், உள்ளூராட்சி சபையின் வருமான உத்தியோகத்தருடன் மேற்கொண்ட நேரடிப் பரிசோதனையின் படி, ஒரு வெல்டிங் வேலைத்தளம் மரத்தளபாடங்களதுவும் செய்வதில்லை என்பதாகும்.

(vi) 2008 ஆம் ஆண்டில் மூடப்பட்ட மொறட்டுவையிலுள்ள ஒரு தனியார் கடையிலிருந்து ரூபா 1,230,000 இற்கு அடுக்குக் கட்டில்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் அதே முகவரியில் 2 ஆண்டுகளிற்கு மேலாக புதிய வர்த்தக நிறுவனமொன்று (புடவைத்தொழில்) இயங்கிவருகின்றது.

(vii) அடுக்குக் கட்டில்களின் கொள்வனவினை ஆதாரப்படுத்துவதற்கு மோசடியான சிட்டைகள் பயன்படுத்தப்பட்டிருந்தன.

(viii) முப்பது அடுக்குக் கட்டிடங்கள் ஒவ்வொன்றும் ரூபா 41,000 ஆகக் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. எனினும், வழங்குனரிடமிருந்து பெறப்பட்ட கூற்றின்படி, சந்தையில் நிலவிய விலை ஒவ்வொன்றும் ரூபா 30,000 மாத்தரமேயாகும். இது தொடர்பில் ரூபா 330,000 ஆன மேலதிகக் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ix) சிற்ப வேலை உருளைகள் கொள்வனவு செய்வதற்காக வழங்குனர்களிற்கு வித்தியாசமான விளக்கவுரைகள் அனுப்பியிருந்தன.

(x) வழங்குனர் ஒவ்வொன்றும் ரூபா 21,500 என்ற உயர்ந்த விலை வீதத்தில் சிற்ப வேலை உருளைகளை வழங்கியிருந்தார். ஆனால் நிலவிய சந்தை விலை ஒவ்வொரு சிற்ப வேலை உருளையும் ரூபா 10,000 ஆகும். இது தொடர்பில் ரூபா 575,000 தொகை மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது.

(இ) நிறுவகமானது உண்மையான தேவை மற்றும் உண்மைத்தன்மையை கருத்திற்கொள்ளாது ரூபா 1.27 மில்லியன் கிரயத்தில் 91 போலியான / நகல்ரோனர்களைக் கொள்வனவு செய்திருந்தது. இதன் விளைவாக அந்தரோனர்கள் நிறுவனத்தின் களஞ்சியத்தில் ஒரு ஆண்டிற்கு மேல் பயன்பாடின்றி வைக்கப்பட்டிருந்தது.

(ஈ) கொள்வனவு செய்யப்பட்ட பின்வரும் நுகர்வுப் பொருட்கள் பயன்படுத்தப்படாது களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்தன.

| **பொருள்** | **அளவு** |
|---|---|
| நுளம்புத் திரி | 465 பைக்கற்றுக்கள் |
| லைசால் கிருமி நாசினி | 662 போத்தல்கள் |
| கார்பிக் | 944 போத்தல்கள் |
| கை கழுவும் கிருமி நாசினி | 107 போத்தல்கள் |
| நுளம்பு திரவ மீள் நிரப்பி | 90 போத்தல்கள் |
| காற்று அழுந்திகள் | 124 போத்தல்கள் |
| டிவீடீ இருவெட்டுக்கள் | 900 எண்ணிக்கை வீசிடி இறுவட்டுக்கள் |
| வீசீடி இருவெட்டுக்கள் | 309 எண்ணிக்கை |

(உ) 2009/2010 ஆம் ஆண்டிற்காக நடாத்தப்பட்ட கணிப்புச் சபை 102 எண்ணிக்கையான பெறுமதிமிக்க இசை மற்றும் நடன உபகரணங்களின் குறைவை அறிக்கை செய்திருந்தது. எனினும், குறைவுகளிற்கான பொறுப்பை தீர்மானிப்பதற்கும் நட்டங்களை அறவிடுவதற்கான பொருத்தமான நடவடிக்கை எடுப்பதற்கும் முகாமைத்துவத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4. கணக்களிதகைமை மற்றும் நல்லாளுகை

### 4.1 கூட்டுத்திட்டம் மற்றும் நடவடிக்கைத்திட்டம்

நிறுவகம், 2010 – 2015 காலப்பகுதிக்காக ஒரு கூட்டுத்திட்டத்தைத் தயாரித்திருந்த போதிலும் 2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்று நிருபத்தின் பிரகாரம் அது போதிய தகவல்களைக் கொண்டிருக்கவில்லை.

## 4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதீட்டு செலவினம் மற்றும் உண்மையான செலவினத்திற்கிடையில் பாரிய வித்தியாசங்கள் அவதானிக்கப்பட்டமையால், முகாமைத்துவக் கட்டுப்பாட்டின் ஒரு தாக்கமான கருவியாக பாதீடு பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பதைக் காட்டுகின்றது.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் காலத்திற்கு காலம் நிறுவகத்தின் பணிப்பாளரின் கவனத்திற்கும் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) சொத்துக்கள் முகாமைத்துவம்

(ஆ) கொள்வனவுகள்

(இ) நிதி முகாமைத்துவம்